1981 ஆகஸ்ட், 22]

எனவே, அதற்காக அரசு முயற்சியெடுத்து உடனடியாக அவர்களுக்கு ஜீப் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, கோட்ட வளர்ச்சி அதிகாரிகளைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் ஜீப் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த ஆண்டு பத்து புதிய ஜீப்புகள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வருகின்ற ஆண்டுகளில் அனைவருக்கும் நிறைவு செய்யப்படும்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ரெவின்யூ மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியை நியமிப்பதைப்போல, அரசுப் பணிகளைக் கிராமப்புறங்களில் தொடங்கும் பொழுதும், நிறைவேற்றும் பொழுதும் பொதுமக்கள் தமிழக அரசின் சாதனைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் செய்வதற்கு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியோடு, மாவட்ட அளவில் தன்னாட்சி பெற்ற, உள்ளாட்சித் துறையால் நிறைவேற்றப்படும் தன்னிறைவுத் திட்டங்களைப் பற்றி விளக்குவதற்காக ஒரு விளம்பர அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, இது போன்ற திட்டங்கள் இதுவரையில் இல்லை. இனிமேல் இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ந. சிவஞானம்: துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும் ஆர்.டி.எல். ஏ. அதிகாரிகளை மாவட்ட அபிவிருத்தி அதிகாரிகளாக நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, அதுபோன்ற திட்டம் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம்.

*வினா எண். 13—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம் இடிந்து விழுந்து விட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில் புதிதாக அலுவலகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (ஆ) சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பகுதி இடிந்து விட்டது.

(ஆ) புதிய கட்டிடம் கட்டுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவையின் துணைத் தலைவரவர்களே, இந்த அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதி எப்பொழுது இடிந்து விழுந்தது? இதனால் பொருட்சேதம் உயிர்ச்சேதம் ஏதாவது ஏற்பட்டதா? அதை விரைவாகக் கட்டி முடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அலுவலகக் கட்டிடம் கட்டும்பொழுது அலுவலர்களுக்கான குடியிருப்புகளையும் கட்டியிருப்பார்கள். அதாவது நல்ல முறையில் இருக்கிறதா என்று அரசு பரிசீலனை செய்ததா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, கடந்த 20—6—1979-ஆம் நாளன்று திடீரென்று அடித்த பலத்த காற்றினால் அந்த அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பகுதி இடிந்து விட்டது. பெருந்தலைவர் உட்காரும் அறையும், ஆணையர் உட்காரும் அறையும் தான் கொஞ்சம் இடிந்து இருக்கிறது. ஆகவே, உடனடியாக வேறு கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதே போன்று கடயம் பகுதியில் கோவிந்தப்பேரி ஊராட்சி ஒன்றிய மன்றக் கட்டிடத்தில் ஒரு பகுதி இடிந்து விழுந்து விட்டது. அதற்குக் காரணமாக இருந்த பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? (குறுக்கீடு) அது கட்டப்பட்டது 1976-ஆம் ஆண்டில். (சிரிப்பு).

(பதிலில்லை).

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலிலே பெருந்தலைவரும், ஊராட்சி ஒன்றிய ஆணையரும் இருக்கக்கூடிய அறைகளிலே தான் இந்த விபத்து நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய முதல் கேள்விலேயே கேட்டேன். இந்த அலுவலகக் கட்டிடம் கட்டுகிற நேரத்திலே அலுவலர்கள் குடியிருப்பும் கட்டியிருப்பார்கள். அவை நல்ல நிலையிலே இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்தார்களா? இல்லையென்றால், அவற்றையும் சீக்கிரமாகப் பழுதுபார்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1981 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, குடியிருப்பைப் பற்றிய பதில் என்னிடத்திலே இல்லை. ஆனாலும் அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும்.

திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியக் கட்டிடம் எந்த ஆண்டு கட்டப்பட்டது? கட்டிடம் இடிந்து விட்டதால் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டு கட்டப்பட்டது என்ற குறிப்புகள் என் னிடத்திலேஇல்லை. எந்த ஆண்டு விழுந்தது என்பதைப் பற்றிய குறிப்புக்கள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. ஆனாலும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எஸ். எஸ். ஆர். ஊராயிற்றே, அந்த ஊரிலே இடிந்து விழுந்திருக்கிறதே, அதைப் பற்றி அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. எஸ். எஸ். இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே,***
(குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன்: கேள்வி கேட்கிறாரா, பதில் சொல்கிறாரா? உறுப்பினர் கேள்வி கேட்க வேண்டும், அமைச்சர் கள் பதில் சொல்ல வேண்டும். புதிய மரபை உருவாக்குகிறீர் களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, கட்டிடம் இடிந்து விழுந்ததால் அதற்குப் பதில் தேவை இல்லையென்று நினைக்கிறேன். ஏனென்றால், அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப் படும் கட்டிடங்கள் விழுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். எஸ். ஆர். அவர்கள் சொல்லிய அந்தக் கருத்தைக் குறிப் பேட்டிலிருந்து நீக்கிவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எஸ். எஸ். ஆர். அவர்கள் குறிப்பிட்டது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முடிந்து போன பிறகு இப்படி எழுந்திருந்து பேசுவது முறையல்ல.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி கடன் வழங்கும் திட்டம்.

*வினா எண். 14—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு கல்லூரியில் படிப்பதற்கு வழங்கப்படும் கல்விக் கடன் ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கிடைக்க வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் ஆசிரியர்கள் உட்பட, கல்லூரிகள் மற்றும் பல தொழில் நுட்பப் பயிலங்களில் படிப்பதற்கு அவர்களது பிள்ளைகளுக்கு கல்விச் செலவுக்கு கடன் வழங்க 28—6—1980 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 995-ல் உத்திரவு வெளியாகியுள்ளது.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள்.

*வினா எண். 15—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இவ்வாண்டில் (1980-81) மருத்துவ கல்லூரிக்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—585, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—176.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS